# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in


## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 8/2016 நாள்: 28.09.2016

### மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான வழிகாட்டி நடைமுறைகள்

தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டடங்கள், அலுவலகங்கள், அறைகளை அரசியல்வாதிகள் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது தொடர்பாக, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கீழ்கண்ட அறிவுரைகளை வழங்கியுள்ளது.

நகர்ப்புற மற்றும ஊரக உள்ளாட்சி அமைப்புக்களில் (மாநகராட்சி, நகராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள், பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் கிராம ஊராட்சிகள்) அலுவல்சாரா உறுப்பினர்கள், உதாரணமாக அரசியல் தலைவர்கள் தலைமையில் நடத்தப்படும் சட்ட பூர்வமான கூட்டங்கள், அந்தந்த அமைப்புக்களின் மூத்த அலுவலர்கள் தலைமையில்தான் கட்டாயம் நடத்தப்பட வேண்டும். இக்கூட்டங்களில் வறட்சி/வெள்ள நிவாரணம் மற்றும் இதுபோன்ற மிக அவசரமான தேவைகள் குறித்து மட்டுமே விவாதிக்கலாம். கூட்ட நடவடிக்கைகள் குறித்து நாளிதழ்களுக்கு செய்தி வழங்குதலோ புதிய திட்டங்கள் மற்றும் நிதி வழங்குதல் தொடர்பாகவோ இக்கூட்டங்களில் விவாதிக்ககூடாது.

மனு நீதிநாள் மற்றும் மக்கள் குறைதீர்க்கும் நாள் போன்றவைகள் தேர்தல் நடைமுறைகள் முடியும்வரை தடைசெய்யப்பட்டுள்ளன. அரசு நிதியிலிருந்து கட்டப்பட்ட சட்டப் பேரவை உறுப்பினர் அலுவலகங்களை தேர்தல் பணிகளுக்காக பயன்படுத்தக் கூடாது, மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மேற்கண்ட கட்டடங்களை பூட்டி தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும்.

மேலும், அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்களும், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புக்களைச் சேர்ந்த கட்டடங்களும்/அறைகளும் அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்களின் தலைவர்கள், மன்ற உறுப்பினர்கள், வார்டு உறுப்பினர்கள் உட்பட எந்தவொரு அரசியல் கட்சியினராலும் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு வாகனங்களை அவர்களிடமிருந்து திரும்பப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும். இந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் தேர்தலை அறிவித்த நாளிலிருந்து உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி).

28.09.16

மக்கள் தொடர்பு அலுவலர்